உ

சிவமயம்



கலைநகர் வட்டு வடக்கு சித்தன்கேணியைச் சேர்ந்த
முன்னாள் துறைமுக அதிகாரசபை உத்தியோகத்தர்
திரு.இ.புரந்திரதேவன் அவர்களின் துணைவியார்

# அமரர்.சித்திராதேவி புரந்திரதேவன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# சித்திரப் பொன்மலர்

12.03.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



அன்புக்கோர் இருப்பிடமாக எமையெல்லாம்

பாசத்துடன் ஆதரித்து, என்றும்

எமது முன்னேற்றமே வாழ்வின் கருத்தாகக் கொண்டிருந்த

எங்கள் அன்புத்தெய்வத்தின் பாதக்கமலங்களில்

காணிக்கையாக இச் சித்திரப் பொன்மலரை

சமப்பிக்கிறோம்.

கணவர்
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



மண்ணில்
04.05.1947

விண்ணில்
10.02.2009

# அமரர்
# திருமதி. புரந்திரதேவன் சித்திராதேவி

### திதி நிருணய வெண்பா

ஆண்டு சருவதாரி தைத்திங்கள் தன்னில்
பூண்ட புரபக்க பிரதமையில் –ஈண்டரிய
சித்திரா தேவியுயர் மன்றதனில் நின்றாடும்
நித்தனடி சேர்ந்தாள் நிறைந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# பஞ்சபுராணம்

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலாம் ஆனாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடி என்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலாம் ஆனாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ

## திருவாசகம்

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள் வெண்ணீற்றாய்
பங்கயத் தயனு மாலறியா
நீதியே செல்வத் திருப்பெருந்துறையில்
நிறை மலர்க் குருந்த மேவியசீர்
ஆதியே யடியேனாதரித் தழைத்தால்
அதெந்து வேயென்றருளாயே.

## திருவிசைப்பா

இடர்கெடுத் தென்னை ஆண்டுகொண் டென்னுள்
இருட் பிழம் பறவெறித் தெழுந்த
சுடர் மணி விளக்கின் உள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ
அடல் விடைப் பாகா அம்பலக் கூத்தா
அயனொடு மாலறியாமல்
படரொளி பரப்பிப் பரந்து நின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்கும் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று
விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழி வழி
யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழ அடி யாரொடுங் கூடி
எம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## சேக்கிழார் திருப்புராணம்

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடியாரவர். வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.
திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

வரத பண்டிதர்



# பிள்ளையார் கதை

## காப்பு

கரும்பும் இளநீரும் காரெள்ளுந் தேனும்
விரும்பும் அவல்பலவும் மேன்மேல் அருந்திக்
குணமுடைய னாய்வந்து குற்றங்கள் தீர்க்குங்
கணபதியே இக்கதைக்குக் காப்பு

திருவிளங்கு மான்மருகா சேவதனில் ஏறி
வரும் அரன்றான் ஈன்றருளும் மைந்தா-முருகனுக்கு
முன்பிறந்த யானை முகவா உனைத் தொழுவேன்
என்கதைக்கு நீ என்றும் காப்பு

## விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமம் கைகூடும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானை
காதலாற் கூப்புவர் தம்கை.

ஒற்றை மருப்பும் ஓரிரண்டு கைத்தலமும்
வெற்றி புனைந்த விழிமூன்றும் - பெற்றதொரு
தண்டைக்கால் வாரணத்தைத் தன்மனத்தில் எப்பொழுதும்
கொண்டக்கால் வாராது கூற்று.

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துஉனக்கு நான்தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்து தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சப்பாணி

எள்ளுப் பொரிதேன் அவல் அப்ப
மிக்கும் பயறும் இளநீரும்
வள்ளிக் கிழங்கும் மாம்பழமும்
வாழைப் பழமும், பலாப்பழமும்
வெள்ளைப்பாலும் மோதகமும்
விரும்பிப் படைத்தேன் சந்நிதியில்
கொள்ளைக் கருணைக் கணபதியே
கொட்டி அருள்க சப்பாணி

சண்டப் பெருஞ்சாளி ஏறிச்
சடைகொண்டு வையத் துலாவி
அண்டத்து அமரர் துதிக்க
அடியார்க்கு அருளும் பிரானே
எண்திக்கும் அன்பர்கள் பார்க்க
இணையற்ற பேரொளி வீசக்
குண்டைக் கணபதி நம்பி
கொடுங்கை யாற்சப்பாணி கொட்டே

## சரஸ்வதி துதி

புத்தகத் துள்ளுறை மாதே
பூவில் அமர்ந்திடு வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளாய் நங்காய்
வேதப் பொருளுக்கு இறைவி
முத்தின் குடைஉடை யாளே
மூவுல குந்தொழுது ஏத்துஞ்
செப்புக் கவித்த முலையாய்
செவ்வரி ஓடிய கண்ணாய்
தக்கொலந் தின்னும் வாயாய்
சரஸ்வதி என்னுந் திருவே
எக்காலமும் உன்னைத் தொழுவேன்
இயல், இசை, நாடகம் என்னும்
முத்தமிழ்க் கல்விகள் எல்லாம்
முழுதும் எனக்கருள் செய்து என்
சித்தந் தனில் நீ இருந்து
திருவருள் செய்திடு வாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரம்

பொன்னிறங் கடுக்கும் புனற்செறி குடுமித்
தென்மலை இருந்த சீர்சால் முனிவன்
கந்த மும்மதக் கரிமுகன் கதை தனைச்
செந்தமிழ் வகையால் தெளிவுறச் செப்பினன்
அன்னத்திற் பிறவில் அரில்தபத் திரட்டித்
தொன்னெறி விளங்கச் சொல்லுவன் கதையே.

## கதை

மந்திர கிரியில் வடபால் ஆங்கு ஓர்
இந்து தவள் சோலை இராசமா நகரியில்
அந்தணன் ஒருவனும் ஆயிழை ஒருத்தியுஞ்
சுந்தரப் புதல்வரைப் பெறுதல் வேண்டிக்
கடவுள் ஆலயமும் கடிமலர்ப் பொய்கையும்
தடநிழற் பள்ளியும் தாம்பல சமைத்துப்
புதல்வரைத் தருகெனப் பொருப்புஅரசு ஈன்ற
மதர்வழி பாகனை வழிபடும் நாளில்
மற்றவர் புரியும் மாதவங் கண்டு
சிற்றிடை உமையாள் சிவனடி வணங்கிப்
பரனே சிவனே பல்லுயிர்க்கு உயிரே
அரனே மறையவர்க்கு அருள்புரிந்து அருளென
அந்தஅந் தணனுக்கு இந்தநற் பிறப்பில்
மைந்தரில் லையென்று மறுத்துஅரன் உரைப்ப
எப்பரிசு ஆயினும் எம்பொருட்டு ஒருசுதன்
தப்பிலா மறையோன் தனக்கு அருள் செய்கென
எமை யாளுடைய உமையாள் மொழிய
இமையா முக்கண் இறைவன் வெகுண்டு
பெண்சொற் கேட்டல் பேதைமை என்று
பண்சொற் பயிலும் பாவையை நோக்கிப்
பேதாய் நீ போய்ப் பிறஎன மொழிய
மாதுமை அவளும் மனந்தளர்வு உற்றுத்
பொன்றிடும் மானிடப் புன்பிறப்பு எய்துதல்
நன்றல என்றே நடுக்கமுற்று உரைப்பக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறைமிடற்று அண்ணல் கருணை கூர்ந்து
பிறைநுதல் அவட்குநீ பிள்ளை யாகச்
சென்று அவண் வளர்ந்து சிலபகல் களிந்தால்
மன்றல் செய்து அருள்வோம் வருந்தலை என்று
விடைகொடுத்து அருள விலங்கன்மா மகளும்
பெடைமயிற் சாயற் பெண்மக வாகித்
தார்மலி மார்பன் சதுர்மறைக் கிழவன்
சீர்மலி மனைவி திருவயிற்று உதித்துப்
பாவையுஞ் சிற்றிலும் பந்தொடு கழங்கும்
யாவையும் பயின்ற இயல்பினள் ஆகி
ஐயாண்டு அடைந்தபின் அன்னையும் அத்தனும்
மையார் கருங்குழல் வாணுதல் தன்னை
மானுட மறையோர்க்கு வதுவை செய்திடக்
கான்அமர் குழலியைக் கருதிக் கேட்பப்
பிறப்பு இறப்பு இல்லாப் பெரியோர்க்கு அன்றி
அறத்தகு வதுவைக்கு அமையேன் யான்என
மற்றவன் தன்னைஉன் மணமக னாகப்
பெற்றிடல் அரிதெனப் பெயர்த்துஅவர் பேச
அருந்தவ முயற்ச்சியால் அணுகுவேன் யான்எனக்
கருந்தட நெடுங்கண் கவுரி அங்கு உரைப்ப
மருமலி கமல மலர்த்தடத்து அருகில்
தருமலி நிழல்தவச் சாலையது அமைத்துப்
பணியணி பற்பல பாங்கியர் சூழ
அணிமலர்க் குழலுமை அருந்தவம் புரிதலும்
அரிவைதன் அருந்தவம் அறிவோம் யாம்என்
இருவரும் அறியா இமையவர் பெருமான்
மான்இடம் ஏந்தும் வண்ணமது ஒழிந்து
மானிடயோக மறையவன் ஆகிக்
குடையொடு தண்டுநற் குண்டிகை கொண்டு
மடமயில் தவம்புரி வாவிக் கரையிற்
கண்ணுதல் வந்து கருணை காட்டித்
தண்நறுங் கூந்தல் தையலை நோக்கி
மின்பெறு நுண்இடை மெல்லிய லாய்நீ
என்பெறத் தவம்இங்கு இயற்றுவது என்றலுங்
கொன்றைவார் சடையனைக் கூடஎன்று உரைத்தலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றுஎனச் சிரித்து நான்மறை யோனும்
மாட்டினில் ஏறி மான்மழு தரித்துக்
காட்டினிற் சுடலையிற் கணத்துடன் ஆடிப்
பாம்பும் எலும்பும் பஃறலை மாலையுஞ்
சாம்பரும் அணிந்து தலையோடு ஏந்திப்
பிச்சை கொண்டு உழலும் பித்தன் தன்னை
நச்சிநீர் செய்தவம் நகைதரும் நுமக்கெனப்
பூங்கொடி அருந்தவம் பூசுரன் குலைத்தலும்
ஆங்கு அவள் நாணமுற்று அணிமனை புகுதச்
சேடியர் வந்து செழுமலர்க் குழலியை
வாடுதல் ஒழிகென மனம்மிகத் தேற்றிச்
சிந்துர வாள்நுதற் சேடியர் சிலர்போய்த்
தந்தைதாய் இருவர் தாளினை வணங்கி
வாவிக் கரையில் வந்துஒரு மறையோன்
பாவைதன் செங்கையைப் பற்றினன் என்றலுந்
தோடுஅலர் கமலத் தொடைமறை முனியை
ஆடக மாடத்து அணிமனை கொணர்கென
மாடக யாழ்முரல் மங்கையர் ஓடி
நீடிய புகழாய் நீ எழுந்து அருள்என
மைமலர்க் குழலி வந்துஎனை அழைக்கில்
அம்மனைப் புகுவன் என்று அந்தணன் உரைத்தலும்
பொற்றொடி நீபோய்ப் பொய்கையில் நின்ற
நற்றவ முனியை நடாத்திக் கொணர்கென
சிவனை இகழ்ந்த சிற்றறிவு உடையோன்
அவனையான் சென்று இங்கு அழைத்திடேன் என்று
சிற்றிடை மடந்தையுஞ் சீறின ளாகி
மற்றைய மாதர் மதிமுகம் நோக்கி
நெற்றியிற் கண்ணுடை நிமலனுக்கு அல்லவென்
பொற்புஅமர் கொங்கை பொருந்துதற்கு அரிதால்
மானிட வேட மறையவன் தனக்கு
யான்வெளிப் படுவ தில்லைஎன்று இசைப்ப
மனையிடை வந்த மாமுனி தன்னை
இணை அடி தொழுதல் இளையோர்க்கு இயல்பெனத்
தந்தையும் தாயும் தகைபெற மொழியச்
சிந்தை குளிர்ந்து சீறுதல் ஒழிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்சொல் மறுத்தல் பாவம் என்று அஞ்சி
ஆயிழை தானும் அவன்எதிர் சென்று
சுற்றிவந்து அவனடி சுந்தரி வணங்கி
மற்றவன் தன்னை மனையிற் கொணர்ந்து
ஆதியம் பகவற்று அன்பன் ஆகும்
வேதியன் பழைய விருத்தன்என்று எண்ணி
ஆசனம்நல்கி அருக்கியம் முதலாப்
பாதபூ சனைகள் பண்ணிய பின்னர்ப்
போனகம் படைத்துப் பொரிக்கறி பருப்புநெய்
ஆன்பால் மாங்கனி அழகிய பலாச்சுளை
தேன்கத லிப்பழஞ் சீர்பெறப் படைத்து
அந்தணன் தன்னை அமுது செய்வித்துச்
சந்தனங் குங்குமச் சாந்திவை கொடுத்துத்
தக்கோ லத்தொடு சாதிக் காயும்
கற்பூ ரத்தொடு கவின்பெறக் கொண்டு
வெள்ளிலை அடைக்காய் விளங்கிய பொன்னின்
ஒள்ளிய தட்டில் உவந்துமுன் வைத்துச்
சிவன்எனப் பாவனை செய்து நினைந்து
தவமுறை முனிவனைத் தாளினை வணங்கத்
தேன்அமர் குழலி திருமுகம் நோக்கி
மோனமா முனிபுன் முறுவல் காட்டிக்
கற்றைச் சடையுங் கரமொரு நான்கும்
நெற்றியில் நயனமும் நீல கண்டமும்
மானும் மழுவும் மலர்க்கரத்து இலங்கக்
கூன்மதி நிலவுங் கொழித்திட முடிமேல்
வரந்தரு முதல்வன் மடமயில்காண
கரந்ததன் உருவங் காட்டிமுன் நிற்ப
மரகத மேனி மலைமகள் தானும்
விரைவொடுஅங் குஅவனடி வீழ்ந்துஇறைஞ் சினளே
அரிஅயன் இந்திரன் அமரர் விஞ்சையர்
கருடர் கின்னரர் காய வாசியர்
ஏதமில் முனிவர் அவுணர் இராக்கதர்
பூதர் இயக்கர்கிம் புருடர் அலகை
சித்தர் தாரகைகந் தருவர்கள் முதலாய்க்
கணிக்கரும் பதினெண் கணத்தில் உள் ளவரும்
மணிக்கரும் களத்தனை வந்தடைந்து அதன்பின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்றலஅங் குழலிக்கு வதுவைநாள் குறித்துத்
தென்றல்வந்து இலங்கு முன்றில் அகத்துப்
பொன்திகழ் பவளப் பொற்கால் நாட்டி
மாணிக் கத்தால் வளைபல பரப்பி
ஆணிப்பொன் தகட்டால் அழகுற வேய்ந்து
நித்தில மாலை நிரைநிரை தூக்கிப்
பத்திகள் தோறும் பலமணி பதித்துத்
தோரணம் நாட்டிச் துகில்விதா னித்துப்
பூரணப் பொற்குடம் பொலிவுற வைத்துத்
திக்குத் தோறுந் திருவிளக்கு ஏற்றிப்
பக்திப் படர்முளைப் பாலிகை பரப்பிக்
கன்னலுங் கமுகுங் கதலியும் நாட்டிப்
பன்மலர் நாற்றிப் பந்தர்சோ டித்து
நலமிகு கைவலோர் நஞ்சுஅணி மிடற்றனைக்
குலவிய திருமணக் கோலம் புனைந்தார்
வருசுரர் மகளிர் மலைமகள் தன்னை
திருமணக் கோலஞ் செய்தனர் ஆங்கே
எம்பி ரானையும் இளங்கொடி தன்னையும்
உம்பர் எல்லாம் ஒருங்குடன் கூடிக்
கடல்என விளங்குங் காவணந் தன்னிற்
சுடர்விடு பவளச் சுந்தரப் பலகையில்
மறைபுகழ்ந்து ஏத்த மகிழ்ந்துஉட னிருத்திப்
பறைஒலி யோடு பனிவளை ஆர்ப்ப
வதுவைக்கு ஏற்ற மறைவிதி நெறியே
சதுர்முகன் ஓமச் சடங்குகள் இயற்றத்
தறுகலன் ஒளிபொன் தாலி பூட்டிச்
சிறுமதி நுதலியைச் சிவன்கைப் பிடித்தபின்
அரிவலஞ் சூழ எரிவலம் வந்து
பரிவுடன் பரிமளப் பாயலின் வைகிப்
போது அணி கருங்குழற் பூவை தன் உடனே
ஓதநீர் வேலை சூழ் உஞ்சைஅம் பதிபுக
ஏரார் வழியின் எண்திசை தன்னைப்
பாரா தேவா பனிமொழி நீ என
வரும் கருங் குழலாள் மற்றும் உண்டோ எனத்
திருத்துஇழை மடந்தை திரும்பினள் பார்க்கக்
களிறும் பிடியும் கலந்து விளை யாடல்கண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிர்மணி பூணாள் உரவோன் உடனே
இவ்வகை யாய்விளை யாடுவோம் ஈங்கென
அவ்வகை அரனும் அதற்கு உடன் பட்டு
மதகரி உரித்தோன் மதகரி யாக
மதர்விழி உமைபிடி வடிவம தாகிக்
கூடிய கலவியிற் குவலயம் விளங்க
நீடிய வானோர் நெறியுடன் வாழ
அந்தணர் சிறக்க ஆனினம் பெருகச்
செந்தழல் வேள்வி வேத ஆகமஞ் சிறக்க
அறம்பல பெருக மறம்பல சுருங்கத்
திறம்பல அரசர் செகதலம் விளங்க
வெங்கரி முகமும் வியன் புழைக் கையொடு
ஐங்கர தலமும் மலர்ப்பதம் இரண்டும்
பவளத்து ஒளிசேர் பைந்துவர் வாயுந்
தவளக் கிம்புரித் தடமருப்பு இரண்டும்
கோடிசூ ரியர்போற் குலவிடு மேனியும்
பேழைபோல் அகன்ற பெருங்குட வயிறும்
நெற்றியில் நயனமும் முப்புரி நூலுங்
கற்றைச் சடையுங் கனகநீள் முடியுந்
தங்கிய முறம்போல் தழைமடிச் செவியுமாய்
ஐங்கரத்து அண்ணல் வந்துஅவ தரித்தலும்
பொங்கரவு அணிந்த புண்ணிய மூர்த்தியும்
மங்கை மனமிக மகிழ்ந்து உடன் நோக்கி
விண்ணு ளோர்களும் விரிந்தநான் முகனும்
மண்ணு ளோர்களும் வந்து உனை வணங்க
ஆங்கு அவர் தங்கட்கு அருள்சுரந்து அருளித்
தீங்கது தீர்த்துச் செந்நெறி அளித்துப்
பாரண மாகப் பல கனி அருந்தி
ஏரணி ஆலின்கீழ் இனிதிரு என்று
பூதலந் தன்னிற் புதல்வனை இருத்திக்
காதல்கூர் மடநடைக் கன்னியுந் தானும்
மைவளர் சோலை மாநகர் புகுந்து
தெய்வ நாயகன் சிறந்து இனிது இருந்தபின்
வானவ ராலும் மானுட ராலுங்
கான்அமர் கொடிய கடுவிலங் காலும்
கருவிக ளாலும் கால னாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவகை யாலும் உயிர்அழியாமல்
திரம்பெற மாதவஞ் செய்துமுன் னாளில்
வரம்பெறு கின்ற வலிமையி னாலே
ஐமுகச் சீயமொத்து அடற்படை சூழ
கைமுகம் படைத்த கயமுகத்து அவுணன்
பொன்னுலகு அழித்துப் புலவரை வருத்தி
இந்நிலத் தவரை இடுக்கண் படுத்திக்
கொடுந்தொழில் புரியும் கொடுமை கண்டு ஏங்கி
அடுந்தொழிற் குலிசத்து அண்ணலும் அமரருங்
கறைபடு கண்டக் கடவுளைப் போற்றி
முறையிடக் கேட்டு முப்புரம் எரித்தோன்
அஞ்சலீர் என்று அவர்க்கு அபயங் கொடுத்தே
அஞ்சுகைக் கரிமுகத்து அண்ணலை நோக்கி
ஆனைமா முகத்து அவுணனொடு அவன்தன்
சேனைகள் முழுவதுஞ் சிந்திடப் பொருது
குன்றுபோல் வளர்ந்த குறட்படை கூட்டி
வென்றுவா என்று விடைகொடுத்து அருள
ஆங்கு அவன் தன்னோடு அமர்பல உடற்றிப்
பாங்குறும் அவன்படை பற்று அறக் கொன்றபின்
தேர்மிசை ஏறிச் சினங்கொடு செருவிற்
கார்முகம் வளைத்த கஜமுகா சுரன்மேல்
ஒற்றை வெண்மருப்பை ஒடித்து அவன் உரத்திற்
குற்றிட எறிந்தான் குருதிசோர்ந் திடவே
சோர்ந்து அவன் வீழ்ந்து துண் என எழுந்து
வாய்ந்தமூ டிகமாய் வந்து அவன் பொரவே
வந்த மூடிகத்தை வாகனம் ஆக்கி
எந்தை விநாயகன் ஏறினன் இப்பால்
எறிந்தவெண் மருப்புஅங்கு இமைநொடி அளவிற்
செறிந்தது மற்றவன் திருக்கரத் தினிலே
எல்லவைக் கதிர்வேல் விழிபடைத்து அருளும்
வெல்லவை தனைத்தன் மனையென மணந்தே
ஓகையோடு எழுந்து ஆங்கு உயர்படை சூழ
வாகையும் புனைந்து வரும்வழி தன்னிற்
கருச்சங் கோட்டில் கயல்கமுகு ஏறுந்
திருச்செங் காட்டிற்சிவனைஅர்ச் சித்துக்
கணபதீச் சரமெனும் காரண நாமம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணபதி புகழ்தரு பதிக்குஉண் டாக்கிச்
சங்கரன் பார்ப்பதி தனிமனம் மகிழ
இங்குவந்து அன்புடன் எய்திய பின்னர்
கணங்களுக்கு அரசராய்க் கதிர்முடி சூட்டி
இணங்கிய பெருமைபெற்று இருந்திட ஆங்கே
தேவர்கள், முனிவர்கள், சித்தர்கந் தருவர்
யாவரும் வந்து இவண் ஏவல்செய் திடுநாள்
அதிகமாய் உரைக்கும் ஆவணித் திங்களின்
மதிவளர் பக்கம் வந்திடு சதுர்த்தியில்
விநாயகர்க்கு உரிய விரதம் என்று எண்ணி
மனாதிகள் கழிந்து மரபொடு நோற்றார்
இப்படி நோற்றிட்டு எண்ணிய பெருநாள்
ஒப்பரும் விரதத்து உறும்ஒரு சதுர்த்தியில்
நோற்றுநற் பூசை நுடங்காது ஆற்றிப்
போற்றிசெய் திட்டார் புலவர் ஐங்கரனை
மருமலர் தூவும் வானவர் முன்னே
நிருமலன் குமரன் நிருத்தம் புரிந்தான்
அனைவரும் கைதொழுது அடியிணை போற்ற
வானைகழற் சந்திரன் மனச்செருக்கு அதனால்
பேழைபோல் வயிறும் பெருத்த காத் திரமும்
தாழ்துளைக் கையுந் தழைமுறச் செவியுங்
கண்டனன் நகைத்தான் கரிமுகக் கடவுளுங்
கொண்டனன் சீற்றங் குபேரனை நோக்கி
என்னைக் கண்டுஇங்கு இகழ்ந்தனை சிரித்தாய்
உன்னைக் கண்டவர் உரைக்கும் இத் தினத்தில்
பழியொடு பாவமும் பலபல விதனமும்
அழிவும்எய் துவரென்று அசனிபோற் சபித்தான்
விண்ணவர் எல்லாம் மிகமனம் வெருவிக்
கண்ணருள் கூருங் கடவுள் இத்தினத்திற்
கோரவெஞ் சினமிகக் கொண்டனன் அந்நாள்
மார்கழித் திங்கள் மதிவளர் பக்கஞ்
சதயந் தொட்ட சட்டிநல் விரதமென்று
இதயத்து எண்ணி யாவரும் நோற்றார்
இப்புவி மாந்தர் இயம்பிய விரதம்
வைப்புடன் நோற்ற வகை இனிச் சொல்வாம்
குருமணி முடிபுனை குருகுலத் துதித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமனும் இளைய தம்பியர் நால்வரும்
தேவகி மைந்தன் திருமுகம் நோக்கி
எண்ணிய விரதம் இடையூறு இன்றிப்
பண்ணிய பொழுதே பலிப்பு உண்டாகவுஞ்
செருவினில் எதிர்த்த செறுநரை வென்று
மருமலர்ப் புயத்தில் வாகை சூடவும்
எந்தத் தெய்வம் எவ்விர தத்தை
வந்தனை செய்யில் வருநமக்கு உரையெனப்
பாட்டுஅளி துதையும் பசுந்துழாய் மார்பனுங்
கேட்டருள் வீரனக் கிளர்த்துதல் உற்றான்
அக்குநீ றணியும் அரன்முதல் அளித்தோன்
விக்கினந் தீர்க்கும் விநாயக மூர்த்தி
ஓடவைத் திடும்பொன் ஒத்து ஒளி விளங்குங்
கோடி சூரியர்போற் குலவிய மேனியன்
கடகரி முகத்தோன் காத்திரம் பெருத்தோன்
தடவரை போலுஞ் சதுர்ப்புயம் உடையோன்
சர்வ ஆபரணமுந் தரிக்கப் பட்டவன்
உறுமதிக் குழவிபோல் ஒருமருப்பு உடையோன்
ஒருகையில் தந்தமும் ஒருகையிற் பாசமும்
ஒருகையில் மோதகம் ஒருகையிற் செபஞ்செய்
உத்தம மாலையோன் உறுநினை வின்படி
சித்திசெய் வதனாற் சித்திவி நாயகன்
என்று இமை யவரும் யாவருந் துதிப்ப
நன்றி தருந்திரு நாமம் படைத்தோன்
புரவலர் காணப் புறப்படும் போதுஞ்
செருவினில் யுத்தஞ் செய்திடும் போதும்
வித்தியா ரம்பம் விரும்பிடும் போதும்
உத்தியோ கங்கள் உஞற்றிடும் போதும்
ஆங்கு அவன் தன்னை அருச்சனை புரிந்தால்
தீங்கு உறாது எல்லாஞ் செயம் உண்டாகும்
கரதலம் ஐந்துடைக் கணபதிக்கு உரிய
விரதமொன்று உளது அதை விரும்பி நோற்றவர்க்குச்
சந்ததி தழைத்திடுஞ் சம்பத்து உண்டாம்
புந்தியில் நினைத்த பொருள்கை கூடும்
மேவலர் தம்மையும் வென்றிட லாம்எனத்
தேவகி மைந்தன் செப்பிடக் கேட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுவலரும் விரதம் நோற்றிடும் இயல்பும்
புகர்முகக் கடவுளைப் பூசைசெய் விதமும்
விரித்து எமக்கு உரைத்திட வேண்டும் என்று இரப்ப
வரைக்குடை கவித்தோன் வகுத்து உரை செய்வான்
தேருநீர் ஆவணித் திங்களின் மதிவளர்
பூர்வ பக்கம் புணர்ந்திடு சதுர்த்தியின்
முந்தும் புலரியின் முறைநீர் படிந்து
சந்தி வந்தனந் தவறாது இயற்றி
அத்தினம் அதனில் ஐங்கரக் கடவுளை
பத்தியோடு அர்ச்சனை பண்ணுதல் வேண்டும்
வெள்ளியாற் பொன்னால் விளங்கும் அவன் றன்
ஒள்ளிய அருள்திரு உருஉண் டாக்கித்
பூசனை புரியப் புகன்றநர் பெரியோர்
ஆசுஇலா மண்ணால் அமைத்தலும் தகுமால்
பூசைசெய் திடும் இடம் புனிதமது ஆக்கி
வாசமென் மலரின் மஞ்சரி தூக்கிக்
கோடிகங் கோசிகங் கொடிவிதா னித்து
நீடிய நூல்வளை நிறைகுடத்து இருத்தி
விந்தைசேர் சித்தி விநாயகன் உருவைச்
சிந்தையின் நினைந்து தியானம் பண்ணி
ஆவா கனம்முதல் அர்க்கிய பாத்தியம்
வாகா ராச மனம்வரை கொடுத்து
ஐந்துஅமிர் தத்தால் அபிடே கித்துக்
கந்தஞ் சாத்திக் கணேசமந் திரத்தால்
ஈசுர புத்திரன் என்னும் மந் திரத்தால்
மாசு அகல் இரண்டு வத்திரஞ் சாத்திப்
பொருந்துஉமை சுதனாப் புகலுமந் திரத்தால்
திருந்தும் பளிதத் தீபங் கொடுத்துப்
பச்சறுகு உடன் இரு பத்தொரு விதமாப்
பத்திர புட்பம் பலபல கொணர்ந்தே
உமாசுதன் கணாதிபன் உயர்கரி முகத்தோன்
குமார குரவன் பாசஅங் குசகரன்
ஏக தந்தன் ஈசுரன் புத்திரன்
ஆகு வாகனன் அருள்தரு விநாயகன்
சர்வகா ரியமுந் தந்துஅருள் புரிவோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏரம்ப மூர்த்தி என்னும்நா மங்களால்
ஆரம் பத்துடன் அர்ச்சனை பண்ணி
மோதகம் அப்பம் முதற்பணி காரந்
தீத கல் மாங்கனி தீங்கத லிம்பழம்
வருக்கை கபித்த மாதுளங் கனியொடு
தரித்திடு நெட்டிலைத் தாழைமுப் புடைக்காய்
பருப்புநெய் பொரிக்கறி. பால், தயிர் போனகம்
விருப்புள சுவைப்பொருள் மிகவும் முன் வைத்து
உத்திரப் பிரிய என்று உரைக்கும்மந் திரத்தால்
நிருத்தன் மகற்கு நிவேதனங் கொடுத்து
நற்றவர் புகன்றநா னான்குஉப சாரமும்
மற்றவன் திருவுளம் மகிழ்ந்திடச் செய்து
எண்ணுந் தகுதி இரு பிறப் பாளர்க்கு
உண்அறு சுவைசேர் ஓதனம் நல்கிச்
சந்தனம் முத்துத் தானந் தக்கினை
அந்தணர்க்கு ஈந்திட்டு அருச்சகன் தனக்குத்
திருத்தகு விநாயகத் திருவுரு வத்தைத்
தரித்தவத் திரத்துடன் தானமாகக் கொடுத்து
நைமித் திகமென நவில்தரு மரபால்
இம்முறை பூசனை யாவர்செய் தாலும்
எண்ணிய கருமம் யாவையும் முடிப்பர்
திண்ணிய செருவிற் செயம்மிகப் பெறுவர்
அரன் இவன் தன்னை முன் அர்ச்சனை பண்ணிப்
புரம் ஒரு மூன்றும் பொடிபட எரித்தான்
உருத்திரன் இவனை உபாசனை பண்ணிப்
விருத்திரா சுரனை வென்று கொன்றிட்டான்
அகலிகை இவன்தாள் அர்ச்சனை பண்ணிப்
பகர்தருங் கணவனைப் பரிவுடன் அடைந்தாள்
தண் ஆர் மதிமுகத் தாள்தம யந்தி
அன்னாள் இவனை அர்ச்சனை பண்ணி
நண்ணார் பரவும் நளனை அடைந்தாள்
ஐங்கரக் கடவுளை அர்ச்சனை பண்ணி
வெங்கத நிருதரை வேரறக் களைந்து
தசரதன் மைந்தன் சீதையை அடைந்தான்
பகீரதன் என்னும் பார்த்திபன் இவனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிதலந் தன்னில் மலர்கொடு அர்ச்சித்து
வரநதி தன்னை வையகத்து அழைத்தான்
அட்டதே வதைகளும் அர்ச்சித்து இவனை
அட்ட போகத்துடன் அமிர்தமும் பெற்றார்
உருக்குமணி என்னும் ஒண்டொடி தன்னைச்
செருக்கொடு வவ்விச் சிசுபா லன்றான்
கொண்டுபோம் அளவிற் குஞ்சர முகவனை
வண்டுபாண் மிழற்றா மலர்கொடு அர்ச்சித்து
தாரியின் மறித்தவன் தனைப் புறங் கண்டு
யாமும் அங்கு அவளை இன்புறப் பெற்றோம்
புகர்முகக் கடவுளைப் பூசனை புரிந்து
மிகமிக மனத்தில் விழைந்தன பெற்றார்
இப்புவி தன்னில் எண்ணுதற்கு அரிதால்
அப்படி நீவிரும் அவனை அர்ச்சித்தால்
எப்பொருள் விரும்பினீர் அப்பொருள் பெறுவீர்
என்று கன்று எறிந்தோன் எடுத்திவை உரைப்ப
அன்றுமுதல் தருமனும் அனுசரும் இவனைப்
பூசனை புரிந்துகட் புலன் இலான் மைந்தரை
நாசனம் பண்ணி நராதிபர் ஆகிச்
சிந்தையில் நினைந்தவை செகத்தினிற் செயங்கொண்டு
அந்தமில் செல்வத்து அரசியல் பெற்றார்
ஈங்கு இது நிற்க இவ்விர தத்துவியல்
ஓங்கிய காதை மற்றுஒன்று உரை செய்வாம்
கஞ்சநான் முகன்தருங் காசிபன் புணர்ந்த
வஞ்சக மனத்தாள் மாயைதன் வயிற்றிற்
சூரன் என்று ஒருவனுந் துணைவருந் தோன்றி
ஆர்கலி சூழ்புவி அனைத்தையும் அழித்தே
சீருடைச் சுவர்க்கத் திருவளங் கெடுத்தும்
புரந்தரன் முதலிய புலவரை வருத்தியும்
நிரந்தரந் தீய நெறிநடத் துதலால்
ஆயிரங் கண்ணனும் அமரரும் முனிவரும்
நீ இரங்கு எமக்கு என நெடுங்கரங் கூப்பி
இரசத கிரிஉறை இறைவனை வணங்கி
வரமிகுஞ் சூரன் வலிமைகள் உரைக்கச்
சுடர்விடு மணிமுடிச் சூரனை வெல்லக்
கதிர்விடு வடிவேல் கரதலத்து ஏந்தும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதல்வனைத் தருவோம் போமின் நீரென
அமரர் கோனுக்கு அரன்விடை கொடுத்துச்
சமர வேல்விழித் தையலுந் தானுங்
கூடிய கலவியிற் கூடாது ஊடலும்
ஓடிய வானோர் ஒருங்குஉடன் கூடிப்
பாவகன் தன்னைப் பரிவுடன் அழைத்துச்
சூரன் செய்யுந் துயரம் எல்லாம்
ஊர் அரவு அணிந்தோற்கு உரையென உரைப்பக்
காமனை எரித்த கடவுள் என்று அஞ்சிப்
பாவகன் பயமுறப் பயம்உனக்கு ஏதென
உற்றிடுங் கரதலத்து உன்னையே தரித்தான்
நெற்றியின் நயனமும் நீயே ஆதலிற்
குற்றம் அடாது கூறுநீ சென்றென
வானவர் மொழிய மற்றவன் தானுந்
தானும் அச் சபையில் தரியாது ஏகி
எமைஆளுடைய உமையா ளுடனே
அமையா இன்பத்து அமர்ந்து இனிது இருந்த
பள்ளி மண்டபம் பாவகன் குறுகலும்
ஒள்ளிய மடந்தை ஒதுங்கிநா ணுதலும்
தெள்ளிதிற் பரமனுந் தேயுவைக் கண்டே
அறுமுகப் பிள்ளையை அவன்கையில் ஈதலும்
வறியவன் பெற்ற வான்பொருள் போலச்
சோதிநீள்முடிச் சுடரோன் கொணர்ந்து
வாதராசன் மலர்க்கையில் கொடுப்ப
நீதியோடு நின்றுகை யேந்திப்
போதநீள் வாயுவும் பொறுக்க ஒண்ணாமல்
தரும்புனற் கங்கை தன்கையில் கொடுப்பத்
தரும்புனற் கங்கை தாங்க ஒண்ணாமற்
பொருந்திரைச் சரவணப் பொய்கையில் வைப்பத்
தண்ஆர் வதனத் தாமரை ஆறுங்
கண்ஆ றிரண்டுங் கரம்ஈ ராறும்
தூண்எனத் திரண்ட தோள் ஈராறும்
மாண் அயில் ஆதி வான்படை யும்கொண்டு
ஆறு முகக் கடவுள் அங்கு அவதரித்திடலும்
மறுகிய உம்பர் மகிழ்வுடன் கூடி
அறுமீன் களைப்பால் அளித்தீர் என்று அனுப்ப


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கவர் முலையுண்டு அறுமுகன் தானும்
ஓங்கிய வளர்ச்சி உற்றிடு நாளில்
விமலனும் உமையும் விடையுகைத்து ஆறு
தலைமகன் இருந்த சரவணத்து அடைந்து
முருகு அலர் குழலுமை முலைப்பால் ஊட்ட
இருவரும் இன்பால் எடுத்து எடுத்து அணைத்துத்
தேவர்தம் படைக்கு சேனா பதியெனக்
காவல் கொண்டு அளிக்கக் கதிர்முடி சூட்டி
அயில்வேல் முதற்பல ஆயுதம் கொடுத்து
திசைஎலாஞ் செல்லுந் தேரும் ஒன்று உதவிப்
பூதப் படைகள் புடைவரப் போய்நீ
ஓதுறும் அவுணரை ஒறுத்திடு என்று அனுப்ப
இருளைப் பருகும் இரவியைப் போலத்
தகுவர் என்று அவரைச் சமரிடை முருக்கிக்
குருகுப் பேர்பெறுங் குன்றமும் சூரன்
மருமமுந் துளைபட வடிவேல் விடுத்தே
யாவரும் வியப்புற இந்திரன் மகளாந்
தேவகுஞ் சரியைத் திருமணம் புணர்ந்திட்டு
அமரர் கோனுக்கு அமருலகு அளித்துக்
குமர வேளுங் குவலயம் விளங்க
அமரா வதியில் அமர்ந்து இனிது இருந்தான்
சமர வேலுடைச் சண்முகன் வடிவுகண்டு
அமரர் மாதர் அனைவரும் மயங்கி
எண்டருங் கற்பினை இழந்தது கண்டே
அண்டர் எல்லாம் அடைவுடன் கூடி
மாதொரு பாகனை வந்து அடி வணங்கி
மருமலர்க் கடம்பன் எம் மாநகர் புகாமல்
அருள்செய வேண்டும் நீ அம்பிகா பதியென
இமையவர் உரைப்ப இறைவன் தானுங்
குமரனைக் கோபங் கொண்டுமுன் முனியக்
காவல்கொண்டு எம்வினை கட்டறுத்து அருளுஞ்
சேவலங் கொடியோன் தேசம் போகத்
திருந்திழை யுமையாள் அருந்துயர் எய்தி
வருந்திமுன் நிற்க மங்கையைப் பார்த்து
மங்கை நீதான் வருந்துதல் ஒழிகுதி
அங்கையாற் சூதெறிந்து ஆடுவோம் வாவென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்றதும் தோற்றதும் விளம்புவார் யாரெனக்
குன்றமென் முலையாள் கூறிய சமயம்
புற்று அரவு அணிந்த புனிதனைக் காண அங்கு
உற்றனன் திருமால் ஊழ்வினை வலியாற்
சக்கிர பாணியைச் சான்றெனக் குறித்து
மிக்கதோர் சூது விருப்புடன் ஆடச்
சாயக நேருந் தடநெடுங் கருங்கண்
நாயகி வெல்ல நாயகன் தோற்ப
இன்ப வாய் இதழுமை யான் வென்றேன் என
எப்பெரு மானும் யான்வென் றேன்என
ஒருவர்க் கொருவர் உத்தரம் பேசி
இருவரும் சாட்சி இவனைக் கேட்ப
மாமனை வதைத்த மால்முகம் நோக்கிக்
காமனை எரித்தோன் கண்கடை காட்ட
வென்ற நாயகி தோற்றாள் என்றும்
தோற்ற நாயகன் வென்றான் என்றும்
ஒன்றிய பொய்க்கரி உடன் அங்கு உரைப்பக்
கன்றிய மனத்தொடு கவுரி அங்கு உருத்து
நோக்கி நீ இருந்தும் நுவன்றிலை உண்மை
வாக்கினில் ஒன்றாய் மனதினில் ஒன்றாய்
மைக்கரி உரித்தோன் வதனம் நோக்கிப்
பொய்க்கரி உரைத்த புன்மையி னாலே
கனல் என வயிற்றிற் கடும்பசி கனற்ற
நிலமிசைக் குருட்டு நெட்டுடற் பாம்பாய்க்
கடகரி முகத்துக் கடவுள் வீற்றிருக்கும்
வடதரு நீழலிற் கிடவெனச் சபித்தாள்
முளரிகள் பூத்த முகில் நிறத்து உருப்போய்த்
துளவு அணி மருமனுந் துணை விழி இழந்தே
ஆண்டு அரைக்கனத்தில் ஆயிரம் யோசனை
நீண்டபைப் பாந்தள் நெட்டுடல் எடுத்து
வளர்மருப்பு ஒன்றுடை வள்ளல் வீற்றிருக்குங்
கிளர்ச்சினை ஆலின் கீழ்க் கிடந் தனனால்
திரிகடக் கரியின் திருமுகக் கடவுளும்
வழிபடும் அடியார் வல்வினை தீர்த்தே
எழில் பெறு வடமரத்தின் கீழ் இருந்தான்
கம்பமா முகத்துக் கடவுள் தன் பெருமையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்புவி யோருக்கு அறிவிப் போம்என
உம்பர் உலகத்து ஓரெழு கன்னியர்
தம்பநூல் ஏணியில் தாரணி வந்து
கரிமுகக் கடவுளைக் கைதொழுதேத்தி
கார்த்திகைக் கார்த்திகை கழிந்த பின் நாளில்
ஆர்த்த கலிங்கத்து அணியிழை வாங்கி
இருபத்தோர் இழை இன்புறக் கட்டி
ஒருபோது உண்டி உண்டு ஒரு மனமாய்
வேதத்து ஆதியும் பூமியில் எழுத்தும்
ஆதி விநாயகற்கு ஆன எழுத்தும்
மூன்றுஎழுத் ததனால் மொழிந்த மந்திரமும்
தேன்தருங் குழலியர் சிந்தையுட் செபித்தே
உரைதரு பதினாறு உபசா ரத்தால்
வரைமகள் மதலையை வழிபாடு ஆற்றி
இருபது நாளும் இப்படி நோற்று
மற்றநாள் ஐங்கர மாமுகன் பிறந்த
அற்றைநாட் சதயமும் ஆறாம் பக்கமுஞ்
சேரும் அத்தினத்தில் தெளிபுனல் ஆடி
வாரண முகத்தோன் வருபெருங் கோயில்
சீர்பெற மெழுகித் திருவிழக்கேற்றி
சூலவு பொற் கலைகள் கொடுவி தானித்து
மலர் பல தொடுத்திடு மாலைகள் ஆற்றிக்
கொலை புரி வடிவேற் குகற்குமுன் வருகை
மலைமுகக் கடவுளை மஞ்சனம் ஆட்டி
பொற்கலை நன்னூல் பூந்துகில் சாத்திச்
சொற்பெறு சந்தனச் சுகந்தம் பூசிச்
செருந்தி சண்பகஞ் செங்கழு நீரொடு
குருந்து மல்லிகை கோங்கொடு பிச்சி
கருமுகை புன்னை படிகமழ் பாதிரி
மருவிரி ஞாழல் மகிழ்இரு வாட்சி
தாமரை முல்லை தளைஅவிழ் கொன்றை
பூமலர் நொச்சி பூத்தமைக் குவளை
காந்தள் ஆத்தி கடம்புசெவ் வந்தி
வாய்ந்தநல் எருக்கு மலக்கர வீரம்
பச்சிலை நொச்சி படர்கொடி அறுகு
முத்தளக் கூவிளம் முதலிய சாத்தித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூபதீப ங்கள் சுகம்பெறக் கொடுத்தே
அப்பம் மோதகம் அவல்எள் ளுருண்டை
முப்பழந் தேங்காய் முதிர் மொழிக் கரும்பு
சீனி தேன் சர்க்கரை செவ்விள நீருடன்
பால் நறு நெய்தயிர் பருப்புடன் போனகங்
கற்பகக் கடவுள் களித்திடத் திருமுன்
பொற்புறப் படைத்துப் பூசனை பண்ணி
நோற்பது கண்டு நோலாதிருந்த
பாப்புரு வாகிய பஞ்சா யுதனும்
யாப்புறு கொங்கையீர் யானும்நோற் பேனென
ஆங்கு அவன் தனக்கும் வேண்டுவதளித்துப்
பாங்கொடு இவ்விரதம் பரிந்துநோற் பித்தார்
ஆண்டர்நா யகனாம் ஐங்கரன் அருளால்
விண்டுவும் பண்டுஉள வேடம் பெற்றே
உஞ்ஞைமா நகர் புகுந்து உமையொடு விலமன்
கஞ்சநாண் மலர்ப்பதங் கைதொழுதிடலும்
பஞ்சிமென் சீறடிப் பார்ப்பதி நெஞ்சின்
வெஞ்சினம் மிகுந்து விமலனை நோக்கி
யான் இடுஞ் சாபம் நீங்கியது ஏனென
மாநெடுங் கண்ணி மணிக்கதவு அடைப்ப
இறையவன் இதற்குக் காரணம் ஏதென
மறிகடல் துயிலும் மாயவன் உரைப்பான்
பிறைமருப்பு ஒன்றுடைப் பிள்ளை அன்று எனக்குத்
தந்து அருள்புரிந்த தவப்பயன் ஈதெனச்
சிந்தை மகிழ்ந்து தேவர் தேவனும்
பூங்கொடி அடைந்த பொன்தாழ் நீங்கச்
சாங்குமுன் உரைத்தார் சக்கர பாணி
இக்கதை சொல்ல அக்கணி சடையனும்
மிக்கநல் விரதம் விருப்புடன் நோற்றபின்
மாதுமை அடைத்தவன்தாழ் நீக்கி
நாதனை நணுகிட நம்பனும் நகைத்தான்
நானோ வந்து நகை யானதுஎனத்
தேன்நேர் மொழியாள் தெளியக் கூறென
நன்மதி நுதலாய் நானிலந் தன்னில்
உன்மகன் நோன்பின் உறுதி அறிந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தை மகிழ்ந்து சிரித்தேன் யானென
அந்தமில் அரனை ஆயிழை வணங்கிப்
பொருஞ்சூர் அறவேல் போக்கிய குமரன்
வரும்படியானும் வருந்திநோற் பேனென
இறையவன் கதைசொல ஏந்திழை நோற்றபின்
குறமட மகளைக் குலமணம் புணர்ந்தோன்
சுடர்வடி வேலோன் தொல்வினை தீர்ந்து
தாதுமை வண்டுஉழுந் தாமத் தானனை
மாதுமை யாளை வந்துகண் டனனே
கண்ணநீ கண்ணிலாக் கட்செவியாகெனத்
தண்ணறுங் குழல் உ மைசாபம் இட்டதுவும்
அக்கு நீறு அணியும் அரன் முதல் அளித்த
விக்கின விநாயக விரதம் நோற்று அதன்பின்
சுடர்க்கதை ஏந்துந் துளவ மாலையன்
விடப்பணி உருவம் விட்டுநீங் கியதும்
பரிவுகொள் கூத்துடைப் பரமனும் நோற்றுக்
கவுரி அன்று அடைத்த கபாடந் திறந்ததும்
வாசமென் குழலுடை மாதுமை நோற்பத்
தேசம் போகிய செவ்வேள் வந்ததும்
வானவர் நோற்று வரங்கள் பெற்றதும்
நாரதமுனிவன் நவின்றிடக் கேட்டே
இந்நிலந் தன்னில் இவ்விர தத்தை
மன்னவன் வச்சிர மாலிமுன் நோற்றுக்
காயத்தெழுந்த கடும்பிணி தீர்ந்து
மாயிரும் புவியின் மன்னாய் வாழ்ந்து
தடமுலைத் திலோத்தமை தனை மணம் புணர்ந்து
மழவிடை போற்பல மைந்தரைப் பெற்றுக்
கடைமுறை வெள்ளியங் கயிலையில் உற்றான்
பரிவொடுஇவ் விரதம் பாரதந் தன்னில்
விரைகமழ் நறுந்தார் விக்கிரமா தித்தன்
மறிகடற் புவிபெற வருந்தி நோற்றிடு நாள்
மற்றவன் காதன் மடவரல் ஒருத்தி
இற்றிடும் இடையாள் இலக்கண சுந்தரி
மெத்த அன்புடன் இவ்விரதம் நோற்பேனென
அந்தந் தன்னில் அணியிழை செறித்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தம் மகிழ்ந்து சிலநாள் நோற்றபின்
உற்ற நோன்பின் உறுதி மறந்து
கட்டிய இழையைக் காரிகை அவிழ்த்து
வற்றிய கொவ்வையின் மாடே போட
ஆங்கு அது தழைத்தேஅலருந் தளிருமாய்ப்
பாங்குற ஓங்கிப் படர்வது கண்டு
வேப்பஞ் சேரியிற் பொய்ச்சிறை இருந்த
பூப்பயில் குழல் சேர் பொற்றொடி ஒருத்தி
அவ்வியம் இல்லாள் அவ்விடம் தன்னிற்
கொவ்வை அடகு கொய்வாள் குறுகி
இழையது கிடப்பக் கண்டு அவள் எடுத்துக்
குழைதவிழ் வரிவிழிக் கோதைகைக் கட்டி
அப்பமொடு அடைகாய் அவைபல வைத்துச்
செப்பமுடனே திருந்திழை நோற்றிடக்
கரிமுகத்து அண்ணல் கருணை கூர்ந்து
பண்டையில் இரட்டிப் பதம் அவட்கு அருளக்
கொண்டு போய் அரசனுங் கோயிலுள் வைத்தான்
விக்கிரமாதித்தன் விழிதுயில் கொள்ள
உக்கிர மான உடைமணி கட்டித்
தண்டையுஞ் சிலம்புந் தாளினின்று ஒலிப்பக்
கொண்டல் போல்வருங் குஞ்சர முகத்தோன்
மனமிகக் கலங்கும் மன்னவன் தன்னிடங்
கனவினில் வந்து காரண மாக
இலக்கண சுந்தரி இம்மனை இருக்கிற்
கலக்கம் வந்திடுங் கழித்திடு புறத்தெனத்
துண்ணென எழுந்து துணைவியை நோக்கிக்
கண்ணுறக் கண்ட கனவின் காரணம்
அண்ணல் உரைத்திடும் அவ்வழி தன்னில்
ஆனை குதிரை அவைபல மடிவுற
மாநகர் கேடுறும் வகையது கண்டு
இமைப்பொழுது இவள்இங்கு இருக்கலா காதுஎன
அயற்கடை அவனும் அகற்றிய பின்னர்
வணிகன் தனது மனைபுகுந்து இருப்ப
மணியும் முத்தும் வலியகல் லாய்விட
அணியிழை தன்னை அவனும் அகற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழவர் தம் மனையில் உற்று அவள் இருப்ப
வளர்பயிர் அழிந்து வளம்பல குன்ற
அயன்மனை அவரும் அகற்றிய பின்னர்க்
குயவன் மனையிற் கோற்றொடி செல்லக்
குயக்கலம் உடைந்து கொள்ளை போக
அயற்கடை அவனும் அகற்றிய பின்னர்த்
தூசுதூய தாக்குந் தொழிலோர் மனைபுகத்
தூசுகளெல்லாந் துணிந்து வேறாகத்
தூசரும் அவளைத் தூரஞ்செய்ய
மாலைக்காரன் வளமனை புகலும்
மாலை பாம்பாம் வகையது கண்டு
ஞாலம் எல்லாம் நடுங்கவந்து உதித்தாய்
சாலவும் பாவிநீ தான்யா ரென்ன
வெம்மனம் மிகவும் மேவி முனிவுறா
அம்மனை அவனும் அகற்றிய பின்னர்
அவ்வை தன்மனை அவள்புகுந்திருப்பக்
அவ்வை செல்லும் அகங்கள் தோறும்
வைதனர் எறிந்தனர் மறியத் தள்ளினர்
கைகொடு குன்றினர் கண்டோர் பழித்தனர்
அவ்வை மீண்டு தன் அகமதிற் சென்று
இவ்வகைக் கன்னிநீ யாரென வினாவக்
காத்தாண்டு உலகு கருணையோடு ஆண்ட
மார்த்தாண்ட ராசன் மாமகள் ஒருத்தி
எல்லார்க்கும் மூத்தாள் இலக்கண சுந்தரி
சொல்லுவிக் கிரம சூரியன் மனையெனச்
சீர்கெட இருந்த தெரிவையை நோக்கி
நீரது கொண்டு நிலம்மெழு கிடுகெனச்
சாணி எடுக்கத் தையலுஞ் சென்றாள்
சாணியும் உழுத்துத் தண்ணீர் வற்றிப்
பேணிய புழுவாய்ப் பெரிது தோன்ற
மான்நேர் விழியாள் வருந்துதல் கண்டு
தானே சென்று சாணி எடுத்துத்
தண்ணீர் கொணர்ந்து தரைமெழுக்கிட்டு
மண்ணிய வீட்டில் மணிவிளக்கு ஏற்றிப்
புத்தகமெடுத்து வாவெனப் புகலப்
புத்தகம் பாம்பாய்ப் பொருந்திநின்று ஆட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெத்த உள்நடுங்கி வீழ்ந்து அவள் கிடப்பக்
கொவ்வையங் கனிவாய்க் கோதையை விலக்கி
அவ்வை தானே அகமதிற் சென்று
புத்தகம் எடுத்துப் பொருந்தப் பார்த்து
வித்தக நம்பி விநாயக மூர்த்தி
கற்பகப் பிள்ளை செய்காரியம் இதுவென
உத்தமி அவ்வை உணர்ந்து முன் அறிந்து
தவநெறி பிழைத்த தையலை நோக்கி
நுவலரும் விநாயக நோன்பு நோற் றிடுகெனக்
கரத்து மூஏழு இழைக் காப்புக் கட்டி
அப்பமும் அவலும் மாம்பல பண்டமுஞ்
செப்பமதாகத் திருமுன் வைத்தே
அவ்வை கதை சொல்ல ஆயிழை கேட்டு
மத்தகக் களிற்றின் மகாவிரதத்தை
வித்தகமாக விளங் கிழை நோற்றுக்
கற்பக நம்பி கருணை பெற்றதன் பின்
சக்கர வாள சைனியத் தோடு
விக்கிர மாதித்தன் வேட்கையிற் சென்று
தானுஞ் சேனையுந் தண்ணீர் விரும்பி
எவ்வகை செய்வோம் உன உளம் மெலிந்தே
அவ்வை தன்மனை அங்குஅவர் அணுக
எய்துந் தாகமும் இளைப்புங் கண்டு
செவ்வே அவற்றைத் தீர்க்க எண்ணி
இலக்கண சுந்தரி என்பவள் தன்னை
அப்பமும் நீரும் அரசற்கு அருளெனச்
செப்பிய அன்னை திருமொழிப்படியே
உண்ணீர்க் கரகமும் ஒருபணி காரமும்
பண்ணேர் மொழியார் பார்த்திபற்கு உதவ
ஒப்பறு படையும் உயர்படை வேந்தனும்
அப்பசி தீர அருந்திய பின்னர்
ஆனை குதிரை அவைகளும் உண்டுந்
தானது தொலையா தன்மையைக் கண்டே
இவ்வகை சமைத்தநீ யாரென வினவ
மவ்வல் அம் குழலாள் மௌனமாய் நிற்ப
அவ்வைதான் சென்று அரசர்க்கு உரைப்பாள்
கணபதி நோன்பின் காரணங் காணிது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணமுடை இவள் உன் குலமனை யாட்டி
இலக்கண சுந்தரி என்று அவ்வை கூற
மங்கையை நோக்கி மனமிக மகிழ்ந்து
திங்கள் நேர் வெள்ளிச் சிவிகையில் ஏற்றிக்
கொண்டு ஊர் புகுந்தான் கொற்ற வேந்தனும்
ஒண்டொடி யாரில் உயர் பதம் உதவினன்
சிந்தூர நுதலார் சென்று அடி பணியச்
சுந்தரி இருந்தாள் சுகத்துடன் மகிழ்ந்தே

## காப்பு

கரும்பும் இளநீரும் காரெள்ளும் தேனும்
விரும்பும் அவல்பலமும் மேன்மேல் அருந்திக்
குணமுடைய னாய்வந்து குற்றங்கள் தீர்க்குங்
கணபதியே இக்கதைக்கு காப்பு

திருவிளங்கு மான்மருகா சேவதனில் ஏறி
வரும் அரன்தாள் ஈன்றருளும் மைந்தா முருகனுக்கு
முன்பிறந்த யானை முகவா உனைத் தொழுவேன்
என்கதைக்கு நீ என்றும் காப்பு

## நூற்பயன்

பொன்னுமிகும் கல்விமிகும் புத்திரரோடு எப்பொருளும்
மன்னு நவமணியும் வந்து அணுகும் - உன்னி
ஒருக்கொம்பின் யானைமுக உத்தமனார் நோன்பின்
திருக்கதையைக் கேட்கச் சிறந்து.

பொற்பனைக்கை முக்கண் புகர்முகத்துப் பொன்மவுலிக்
கற்பகத்தின் நோன்பின் கதைதன்னைச் - சொற்பெருகக்
கற்றவரும் நோற்றவருங் காதலித்துக் கேட்டவரும்
பெற்றிடுவர் கற்பகத்தின் பேறு.

வெள்ளை எருது ஏறும் - விரிசடையோன் பெற்றெடுத்த
பிள்ளையார் நோன்பின் பெருங்கதையை - உள்ளபடி
நோற்றார் மிகவாழ்வார் நோலாது அருகிருந்து
கேட்டோர்க்கும் வாராது கேடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூலிலார் நோற்கிற் சுதரை மிகப்பெறுவார்
சாலமிகும் வெங்கலியார் தாம் நோற்கில் - மேலைப்
பிறப்பு எல்லாம் நல்ல பெருஞ் செல்வம் எய்திச்
சிறப்பிலே வாழ்வார் சிறந்து.

பிள்ளையார்கதை முற்றுப் பெற்றது
திருச்சிற்றம்பலம்

## போற்றத் திரு அகவல்

அருள்புரிந்து அருளும் அரசே போற்றி
இருவினை துடைக்கும் இறைவா போற்றி
மறைமுனி ஒருவன் மாங்கனி கொணர்ந்து
கறைமிடற்று இறைவன் கையில் கொடுப்பக்
வேலனும் நீயும் விரும்பி முன்நிற்ப
ஒருநொடி அதனில் உலகெலாம் வலமாய்
வரரும் அவர்தமக்கு வழங்குவோம் யாமென
விரைவுடன் மயில்மிசை வேலோன் வருமுன்னர்
அரனே வலம் வந்து அக்கனி வாங்கிய
விரகுள விக்கின விநாயக போற்றி
முன்னடி தெரியா முதல்வனைப் போற்றிப்
பின்னடி தெரியாப் பெருங்கவிப் பெருமான்
மணிமி சைத்உனை வாவியில் செல்லக்
கண்ணிலான் இவனெனக் கரந்து அவன் போக
கரைமிசை ஏறிக் காணாது இரங்கி
உரை தடுமாறி உள்ளம் கலங்கிக்
கூகூ கணபதி கூகூ என்னக்
கூகூ என்றருள் குன்றே போற்றி
அப்பணி சடையோன் முப்புரம் எரிக்க
இப்புவி அதனை இரதம் ஆக்கித்
தினகரன் மதிதேர்ச் சில் லதாகப்
பொருவரு மறைகளே புரவியாகச்
சங்கை சேர் நான்முகன் சாரதியாகச்
பங்கையக் கண்ணன் பகழியாக
மலைசிலையாக வாசுகி நாணா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை பெற நிற்கும் நெடுந்தேர் தன்னில்
விக்கினந் தீர்க்கும் விநாயக நம எனச்
சிக்கென இறைவன் செப்பா தேறலின்
தச்சுறச் சமைத்த தகைமணி நெடுந்தேர்
அச்சறுத்து அருளும் அரசே போற்றி
வேதப் பொருளாம் விமலா போற்றி
பூதப் படையுடை புனிதா போற்றி
கரமைந்து உடைய களிறே போற்றி
பரமன் பயந்த பாலா போற்றி
அகிலம் ஈன்று அருளும் அம்மை தமக்குத்
திருமகன் ஆகிய செல்வா போற்றி
அற்றவர்க்கு அருள்புரி அரசே போற்றி
கற்றவர் மனத்திற் காண்பாய் போற்றி
பாசாங் குசம்கை பரித்தாய் போற்றி
தேசார் மணிமுடித் தேவே போற்றி
ஏழுநர கெழுபிறப்பு அறுப்பாய் போற்றி
எழுமையும் எமக்கு இங்கு இரங்குவாய் போற்றி
துளைநெறி வக்கிர துண்டா போற்றி
வளநிகர் ஒற்றை மருப்பா போற்றி
சுரர் தொழும் முருகன் துணைவா போற்றி
நல்லவர் புகழும் நம்பா போற்றி
வல்லமைக்கு உரிய மணாளா போற்றி
கயமுகத்து அவுணனைக் காய்ந்தாய் போற்றி
வயமுக மூஷிக வாகனா போற்றி
ஓங்கா ரத்தனி உருவே போற்றி
நீங்காக் கருணை நிமலா போற்றி
துறவர் தமக்கு ஒரு துணைவா போற்றி
முறைநிகர் தழைசெவி முதல்வா போற்றி
துண்டமா மதிபோல் துலங்கிய கோட்டைக்
கண்டகம் ஆகக் கைதனில் பிடித்துப்
பண்டு பாரதப் பழங்கதை பசும்பொன்
விண்டுவில் வரைந்த விமலா போற்றி
போற்றி போற்றியுன் பொற்பதம் போற்றி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருகைக் கோவை

அன்புடைக் கடவுளர்க்கு அதிபதி செயசெய
ஆபத்து அகற்றும் ஐங்கர செயசெய
இந்துச் சடைமுடி இறைவா செயசெய
ஈசன் பெற்ற எம்மான் செயசெய
உன்னிய முடிக்கும் ஒருவா செயசெய
ஊர்மனை சந்தி உகந்தாய் செயசெய
எம்பெருமானே ஏகனே செயசெய
ஏழுல குந்தொழ இருப்பாய் செயசெய
ஐயா கணங்கட்கு ஆதி செயசெய
ஒற்றை மருப்பை உடையாய் செயசெய
ஓங்கிய கரிமுகம் உற்றாய் செயசெய
ஔவியம் இல்லா தவனே செயசெய
ஆ:கர அணிந்த ஆதி செயசெய
கண் மூன்று உடைய களிறே செயசெய
ஙப்போல் மழு ஒன்று ஏந்தீ செயசெய
சங்கரன் தேரைச் சறுத்தாய் செயசெய
ஞயமுடை வித்தக நம்பீ செயசெய
இடமுடை விக்கினசுரா செயசெய
இணங்கிய அன்பர்க்கு இனியாய் செயசெய
தத்துவம் உறைதரு சாமீ செயசெய
நன்நெறி வித்தக நம்பீ செயசெய
பகீரதிக்கு இனிய பாலா செயசெய
மன்றுள் ஆடி மகனே செயசெய
இயக்கரைக் களையும் இறைவா செயசெய
அவரக் கிண்கிணி அணிவாய் செயசெய
இலகக் கொம்பு ஒன்று ஏந்தீ செயசெய
வஞ்சனை பட பழவினை மாற்றுவாய் செயசெய
அழகிய வேலனுக்கு அண்ணா செயசெய
இளமத யானை முகத்தாய் செயசெய
இறக்கரி சாடும் இறைவா செயசெய
அனந்தல் ஆடும் அரசே செயசெய
கரமைந்துடைய கணபதி செயசெய
காமன் பகைவன் காதலா செயசெய
கிரியில் பாரதம் தீட்டினாய் செயசெய





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ்மை ஒழித்துக் கிளர்வாய் செயசெய
குண்டப் பண்டிக் குருவே செயசெய
கூறிய மும்மதக் கோவே செயசெய
கெண்டயம் கண்ணுமை மகனே செயசெய
கேதாரப் ப்ரியம் ஆனாய் செயசெய
கையில் சக்கரம் உடையாய் செயசெய
கொவ்வைக் கனிவாய் மதலாய் செயசெய
கோலக் குடநிகர் வயிற்றாய் செயசெய
கௌவைப் பழவினை தீர்ப்பாய் செயசெய

*****



ஔவையார் அருளிய

## விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாட
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்னமருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழமுகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன்முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெஞ்ஞான
அற்புதம் ஈன்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாஎன்குத் தானெழுந் தருளி
மாயாப்பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடிவாகி குவலயந் தன்னில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடாவகைதான் மகிழ்தெனக் கருளி
கோடாயுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டாஞான தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறுக்கருணை இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங்காட்டி
ஆறாதாரத் அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனை கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவி லுணர்த்திக்
குண்டலி அதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதாரத்து மூண்டெழு கனலைக்
காலாலெழுப்பும் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டுநிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக சூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முகமாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்தி
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டிற்கு ஒன்றிடமென்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்திஎன் செவியில்
எல்லை யில்லா ஆனந்த மளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டி
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டி
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்தி
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக்கரத்தின் அரும் பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்து
தத்துவ நிலையை தந்தெனையாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

விநாயகர் அகவல் முற்றிற்று




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# கந்தர் சஷ்டி கவசம்



## காப்பு

துதிப்போர்க்கு வல்வினை போம்
துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம்
பலித்துக் கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும்;
நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசம் தனை.

## குறள் வெண்பா

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

## நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி ஆட,
மையல் நடஞ்செயும் மயில்வாகனனார்
கையில் வேலால் எனைக் காக்கவென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக!
வருக! வருக! மயிலோன் வருக!
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக! வருக!
வாசவன் மருகா! வருக! வருக!
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா வருக!
நீறிடும் வேலவன் நித்தம் வருக!
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக!
ரவண பவச ரரரர ரரர


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம!
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக! வருக!
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக!
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண்டு ஆயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டு இலங்க
விரைந்து எனைக்காக்க வேலோன் வருக!
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற்று என்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலியாம் சிவ குகன் தினம் வருக!
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மார்பில்
பல் பூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகு உடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற் சீராவும்
இருதொடை அழகும் இணை முழந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்தனை ஆளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா வினோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க!
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க!
பன்னிரு விழியால் பாலனைக் காக்க!
அடியேன் வதனம் அழகுவேல் காக்க!
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க!
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க!
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க!
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க!
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க!
முப்பத் திருபல் முனைவேல் காக்க!
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க!
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்இளம் கழுத்தை இனியவேல் காக்க!
மார்பை இரத்தின வடிவேல் காக்க!
சேர்இள முலை மார் திருவேல் காக்க!
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க!
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க!
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க!
பழுபதி னாறும் பருவேல் காக்க!
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க!
சிற்றிடை அழகுறச் செவ்வெல் காக்க!
நாணாம் கயிற்றை நல்வேல் காக்க!
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க!
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க!
வட்டக் குதத்தை வல்வேல் காக்க!
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க!
ஐவிரல் அடிஇணை அருள்வேல் காக்க!
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க!
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க!
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவில் சரஸ்வதி நல்துணை ஆக
நாபிக் கமலம் நல்வேல் காக்க!
முப்பால் நாடியை முனைவேல் காக்க!
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க!
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவவே வந்து கனகவேல் காக்க!
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க!
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க!
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க!
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க!
காக்க காக்க கனகவேல் காக்க!
நோக்க நோக்க நொடியில் நோக்க!
தாக்க தாக்க தடையறத் தாக்க!
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனைமயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைகளுடனே பல கலசத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாள் எனைக் கண்டால் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டு உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்!
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணல் அதுவாக
விடுவிடு வேலை வெருண்டு அதுஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடாது ஓட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயர் அங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல் விப்புருதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாது ஓட நீ எனக்கு அருள்வாய்!
ஈரேழு உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா(க)
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே! சைலொளி பவனே!
திரிபுர பவனே திகழொளி பவனே!
பரிபுர பவனே! பவம்ஒளி பவனே!
அரிதிரு மருகா! அமரா பதியைக்
காத்து. தேவர்கள் கடும்சிறை விடுத்தாய்!
கந்தா குகனே கதிர் வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா! கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா!
தணிகா சலனே! சங்கரன் புதல்வா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்காமத்து உறை கதிர்வேல் முருகா!
பழநிப் பதிவாழ் பால குமாரா!
ஆவினன்குடி வாழ் அழகிய வேலா!
செந்தில்மாமலை உறும் செங்கல்வ ராயா!
சமராபுரி வாழ் சண்முகத் தரசே!
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யான்உனைப் பாட
எனைத்தொடர்ந்து இருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசம் ஆக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன் அருளாக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற்று அடியேன் சிறப்புடன் வாழ்க!
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்!
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க!
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீ குரு! பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்ற வளாமே!
பிள்ளையென்று அன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன் என்மீதுன் மனமகிழ்ந்து அருளி
தஞ்சம் என்ற அடியார் தழைத்திட அருள்செய்!
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத் துடன் அங்கம் துலக்கி
நேசமுடன் ஒரு நினைவது ஆகி
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத்தி ஆறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அஷ்டதிக்கு உள்ளோர் அடங்கலும் வசமாய்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசைமன்னர் எண்மர் சேர்ந்தங்கு அருளுவர்
மற்றவர் எல்லாம் வந்து வணங்குவர்;
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்;
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்;
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்;
கந்தர் கைவேலாம் கவசத்து அடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்;
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்;
பொல்லாத வரைப் பொடிப்பொடி ஆக்கும்;
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்காரத்து அடி;
அறிந்து உனதுள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீர லட்சுமிக்கு விருந்து ணவாகச்
சூரபத் மாவைத் துணித்த கையதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்து அமுதளித்த
குருபரன் பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி!
எனைத்தடுத்து ஆட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலா போற்றி!
தேவர்கள் சேனா பதியே போற்றி!
குறமகள் மனமகிழ் கோவே போற்றி!
திறமிகு திவ்விய தேகா போற்றி!
இடும்பா யுதனே இடும்பா போற்றி!
கடம்பா போற்றி! கந்தா போற்றி!
வெட்சி புனையும் வேளே போற்றி!
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே
மயில் நடம் இடுவோய் மலரடி சரணம்!
சரணம் சரணம் சரவண பவஓம்!
சரணம் சரணம் சண்முகா சரணம்!
சரணம் சரணம் சண்முகா சரணம்!

****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரஸ்வதி தேவியின் புகழ்



1. வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்;
கொள்ளை இன்பம் குலவு கவிதை
கூறுபாவலர் உள்ளத்து இருப்பாள்
உள்ளதாம் பொருள் தேடி உணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின்று ஒளிர்வாள்;
கள்ளம் அற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத்துள் பொருள் ஆவாள்
(வெள்ளை)

2. மாதர் தீங்குரல் பாட்டில் இருப்பாள்
மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடம் கொண்டாள்
கோதுஅ கன்ற தொழில் - உடைத்தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தின் எழிலிடை உற்றாள்
இன்ப மேவடி வாகிடப் பெற்றாள்
(வெள்ளை)

3. வஞ்சம் அற்ற தொழில் புரிந் துண்டு
வாழும் மாந்தர் குல தெய்வம் ஆவாள்
வெஞ்ச மர்க்குஉயி ராகிய கொல்லர்
வித்தை ஓர்ந்திடு சிற்பியர் தச்சர்
மிஞ்ச நற்பொருள் வாணிகம் செய்வோர்
வீர மன்னர்பின் வேதியர் யாரும்
தஞ்சம் என்று வணங்கிடும் தெய்வம்
தரணி மீது அறிவாகிய தெய்வம்
(வெள்ளை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. தெய்வம் யாவும் உணர்ந்திடும் தெய்வம்
தீமை காட்டி விலக்கிடும் தெய்வம்
உய்வம் என்ற கருத்துடையோர்கள்
உயிரி னுக்குஉயிர் ஆகிய தெய்வம்
செய்வம் என்றொரு செய்கை எடுப்போர்
செம்மை நாடிப் பணிந்திடு தெய்வம்
கைவ ருந்தி உழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம் கடவுளர் தெய்வம்
(வெள்ளை)

5. செந்தமிழ் மணி நாட்டிடை உள்ளீர்
சேர்ந்து இத்தேவை வணங்குவம் வாரீர்
வந்தனம் இவட்கே செய்வது என்றால்
வாழி அஃது இங்கு எளிதன்று கண்டீர்!
மந்திரத்தை முணுமுணுத்து ஏட்டை
வரிசையாக அடுக்கி அதன்மேல்
சந்தனத்தை மலரை இடுவோம்
சாத்திரம் இவள் பூசனை அன்றாம்
(வெள்ளை)

6. வீடு தோறும் கலையின் விளக்கம்
வீதி தோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்
நகர்கள் எங்கும் பலபல பள்ளி
தேடு கல்வி இலாததோர் ஊரைத்
தீயினுக்கு இரையாக மடுத்தல்
கேடு தீர்க்கும் அமுதம் என் அன்னை
கேண்மைகொள்ள வழிஇவை கண்டீர்
(வெள்ளை)

7. ஊணர் தேசம் யவனர்தம் தேசம்
உதய ஞாயிற்று ஒளிபெறு நாடு
சேண் அகன்றதோர் சிற்றடிச்சீனம்
செல்வப்பார சிகப்பழந் தேசம்
தோள் நலத்த துருக்கம் மிசிரம்
சூழ்க டற்கப் புறத்தினில் இன்னும்
காணும் பற்பல நாட்டிடை எல்லாம்
கல்வித் தேவின் ஒளிமிகுந்து ஓங்க
(வெள்ளை)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. ஞானம் என்பதோர் சொல்லின் பொருளாம்
நல்ல பாரத நாட்டிடை வந்தீர்
ஊனம் இன்று பெரிது இழைக்கின்றீர்!
ஓங்கு கல்வி உழைப்பை மறந்தீர்
மானம் அற்று விலங்குகள் ஒப்ப
மண்ணில் வாழ்வதை வாழ்வென லாமோ?
போன தற்கு வருந்துதல் வேண்டா
புன்மை தீர்ப்ப முயலுவம் வாரீர்!
(வெள்ளை)

9. இன்னறும் கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆல யம்பதி னாயிரம் நாட்டல்
பின்னர் உள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்
(வெள்ளை)

10. நிதிமி குந்தவர் பொற்குவை தாரீர்!
நிதிகு றைந்தவர் காசுகள் தாரீர்!
அதுவும் அற்றவர் வாய்ச்சொல் அருளீர்!
ஆண்மை யாளர் உழைப்பினை நல்கீர்
மதுரத் தேமொழி மாதர்கள் எல்லாம்
வாணி பூசைக்கு உரியன பேசீர்!
எதுவும் நல்கிஇங்கு எவ்வகை யானும்
இப்பெருந் தொழில்நாட்டுவம் வாரீர்
(வெள்ளை)

(மகாகவி பாரதியார்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்மன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# லிங்கஷ்டகம்



ப்ரஹ்ம முராரி ஸுரார்ச்சித லிங்கம்
நிர்மல பாஷித சோபித லிங்கம்
ஜன்மஜ துர்க்க விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம

தேவமுனி ப்ரவராச்சித லிங்கம்
காமதஹம் கருணா கர லிங்கம்
ராவண தர்ப்ப விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

ஸர்வ ஸுகந்தி ஸுலேபித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்
ஸித்த ஸுராஸுர வந்தித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

கனக மஹாமணி பூ சித லிங்கம்
பணிபதி வேஷ்டித சோபித லிங்கம்
தஷ ஸுயக்ஞ விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹார ஸுசோபித லிங்கம்
ஸஞ்சித பாப விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

தேவ கணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவையர் பக்திபி ரேவச லிங்கம்
தினகர கோடி ப்ரபாகார லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

அஷ்ட தளோபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்ட தரித்ர விநாசித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸுரகுரு ஸுரவர பூஜித லிங்கம்
ஸுரவன புஷ்ப ஸதார்ச்சித லிங்கம்
பராத்பரம் பராமார்மக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

*******



## திருப்புகழ்

திருச்சிற்றம்பலம்

இருவினையின் மதிமயங்கித் திரியாதே
எழுநரகி லுழலு நெஞ்சுற் றலையாதே
பரமகுரு அருள் நினைந்திட் டுணர்வாலே
பரவு தரி சனையை என்தற் கருள்வாயே
தெரி தமிழை உதவு சங்கப் புலவோனே
சிவனருளும் முருக செம்பொற் கழலோனே
கருணை நெறி புரியும் அன்பர்க் கெளியோனே
கனக சபை மருவு கந்தப் பெருமாளே

அருணகிரி நாத

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்

- கச்சியப்பசிவாசாரியார் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அமரர்.சித்திராதேவி புரந்திரதேவனின் வாழ்க்கைக் குறிப்பும் இரங்கற்பாவும்

இருநிலந் தன்னில் பெருமையோ டிலங்கு
மருமைசேர் ஈழத் தமிநா டதனில்
தருவினம் பொழில் சூழ்யாழகத் தோர்பால்
திருவுடன் விளங்கும் வட்டுக் கோட்டை
செந்நெல் வயலும் செழிப்புறு வாழையும்
கன்னலும் கமுகும் கலித்தினி தோங்கும்
மன்னிய வளம்பல மலிந்த வட்டூரில்
முன்னே வந்த மூத்த குடியதனில்
தம்பு வேலுப் பிள்ளையின் கான்முளையாக
நம்பி சட்டநாத பிள்ளை தோன்றினன்
அன்னவர் பொலிஸ் பதவியிலிருக் கையில்
தன்னது தந்தையின் தங்கை மகளாம்
உத்தமி சிவயோகம் திருவை மணந்து
மெத்தவும் அன்புடன் வாழ்ந்ததன் பேரால்
சித்திரையிற் சித்திரையிற் சீரார் பௌர்ணமியில்
சித்திரா தேவியவர் சர்வசித்தில் வந்துதித்தார்
பாரினில் அன்னவர் தன்னுடன் ஓம்பிட
பேராம் பிகையுடன் செல்வக் குணவதியும்
சிறீமுருக னவன்பின் சிறீசண்முக வேலும்
தவநா யகியுடன் தவரஞ் சினியும்
சிறீசெந்தி வேலுடன் தவனேஸ் வரியும்
உற்றவுடன் பிறப்பா தோன்றி னார்களே
எங்கள் நங்கை சித்திரா தேவி
மங்களச் செல்வியா மனையவர் தம்முடன்
வளர்மதி யென்ன வளர்ந்திடு நாளில்
தளர்விலாக் கல்வி கற்றுத் தேர்ந்து
வதுவைக் கேற்ற பருவம் அடைந்திட
அகமகிழ் வுடனே பெற்றோர் தாமும்
சிறுபிள்ளை களாய் பிள்ளைகள் வளர்கையில்
உறுமைத் துணர்கள் நேர்ந்தன் படியே
குறைவில் கதிரேசர் குழந்தையின் மைந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசில் துறைமுக பதவி வகித்த
இரத்தின சிங்கம் நம்பி அவர்க்கும்
நேரிழை புஸ்பராச மணியம் மாவிற்கும்
நேரிலா தலைமக னாகிய தக்கோன்
அரச சேவையில் துறைமுக மதனில்
சிரசாம் கொக்சன் பதவி வகித்தோன்
புரோகித தேவனுக்கும் பாலதே வனுக்கும்
வாம தேவனுக்கம் கலைமதி யவர்க்கும்
அண்ண னாகிய புரந்திர தேவனை
நன்மணம் புணர்த்தி வாழ்த்தினர் கேள்வர்
சித்திரா தேவியும் புரந்திர தேவனும்
மெத்தவும் மனம்போல் வாழ்வெய் தியதனால்
மிக்க மகிழ்வுடன் இல்லறம் காத்து
சுற்றம தோம்பி சமுகம் பேணி
சற்றும் மாறிலா நல்லறப் பயனா
முதன் மகளாக இந்து மதியுடன்
அருள் மதியின்பின் புதல்வர் களாக
இளங் குமரனையும் இளந் திரையனையும்
இளஞ் சென்னியையும் நிறைவுடன் பெற்றனர்
மக்களை நன்கு வளர்த்திடு நாளில்
தக்க கல்வியும் அறிவும் புகட்டி
தொக்க ஒன்றாக வாழ்ந்து வந்தனரே
சந்திர முகஎழில் இந்து மதிக்கு
நந்தன் ஹேம குமார்தனை வரித்து
பேத்தியர் ஹம்சா வினோதா அன்பாய்
பார்த்திருந் தவர்களை தூக்கி மகிழ்ந்தார்
அருள்மதி யென்னும் திருமகள் தம்மை
மருவிலா விக்கினேஸ் வரற்கு நல்கி
பேரராம் அருள்ராஜ் கேசவராஜ் உடன்
பேத்தியர் பவித்தா காயத்திியை கண்டு
பேரன் புடனே காத்து அணைத்தார்
வித்தகச் செல்வன் இளங் குமரற்கு
உத்தமி கேதீஸ் வரியை முடித்து
இனிதா வாழ்வது பார்த்து இன்புற்றார்
பொற்புடை நம்பி இளந்திரை யற்கு
சற்குண வதிகோ மதனி மங்கையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| வதுவையுட் | படுத்தி | விமல | ரூபனெனும் |
| மதுமலர்ப் | பேரனோ | டளாவி | யுலாவினார் |
| செல்ல | மகனாம் | இளஞ்சென்னி | யவர்க்கு |
| நல்ல | மொழியாள் | அனுசா | திருவை |
| மணவினை | புரிவித்து | ஷாரங்கி | சிறீராம் |
| இனையில் | பேரரை | ஆசையோ | டணைத்தார் |
| கணவரும் | மக்களும் | மகிழ்ந்திட | நடந்து |
| அமலனை | அகத்துறு | இதயத் | திருத்தி |
| அகமகிழ் | வுடனே | வாழ்ந்திடும் | வேளை |
| நாட்டுப் | பிரச்சினை | அதன் | விளைவாக |
| ஈட்டுறு | பிள்ளைகள் | இனிய | கேள்வர் |
| மாட்டி | விட்டாரோ | வெனமன | மேங்க |
| வாட்டுறு | நோயும் | வலிதாய் | வருத்த |
| பெண்ணுய | ரிலக்கணம் | பெருவழிப் | படியே |
| மண்ணினில் | வாழ்ந்த | சித்திரா | தேவி |
| பாசத் | துயர்ந்த | கணவர் | பிள்ளைகள் |
| நேசப் | பேரர் | பேத்தியர் | மருகோர் |
| தங்கைகள் | தம்பிமார் | மைத்துணர் | சுற்றம் |
| எங்கனும் | நின்று | அலறிப் | புலர |
| அகவை | யாண் | டறுபத்தி | ரண்டில் |
| இரண்டா | யிரத்து | ஒன்பதாம் | வருடம் |
| பத்தாந் | தேதி | ஜனவரி | தன்னில் |
| அத்தன் | அம்பலத் | தரனடி | சேர்ந்தார் |

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*****

## தேற்றம்

பரிந்த சுற்றமும் மற்றவன் துணையும்
பலரும் கண்டு அழுது எழவுயிர் உடலை விட்டுப்
பிரிந்து போமிது நிச்சயம் அறிந்தால்
பேதை வாழ்வெனும் பிணக்கினைத் தவிர்த்துக்
கருந்தடங் கண்ணிப் பங்கனை உயிரைக்
காலகாலனைக் கடவுளை விரும்பி
செருந்தி பொன்மலர் திருத்தினை நகருட்
சிவக்கொழுந்தினைச் சென்றடை மனனே

திருச்சிற்றம் (சுந்தரர் தேவாரம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## மக்களின் உள்ளக்குமுறல்

அன்புத்தெய்வம் அம்மாவே ஆசையோ டெமையீன்றாய்
இன்பச்செல்வம் நீஅம்மா இசைவோடு வாழவைத்துன்
துன்பந் தன்னில் இல்லாமே தூரத்தே இருந்தனமால்
தென்புலம் நீ செல்கையிலே சொல்லாமல் போனீரே

பற்று * மறவாமல் பேரமக்கள் உனைக்கேட்க
சொற்றும் வழியின்றி சோகத்தில் ஏங்குகிறோம்
உற்ற துணைநீ உயிர்நீ உணர்வும் நீ
சுற்றமுந்நீ தாயும்நீ எம்முடைய செல்வமும்நீ
பற்றும்நீ பாசமுந்நீ பாக்கியமா நாம்பெற்ற
மற்றுளவும் நீயென்றே மாறாமல் நாம்நினைத்தோம்
சற்றும் நினையாமல் தவிக்கவிட்டு சென்றீரே
பெற்றவுன் பிள்ளைகள் நாம் பேதலித்து ஏங்குகின்றோம்
தெற்றவழி யாமறியோம் தேவே விளம்பாயோ

## மருமக்களின் கண்ணீர் வரிகள்

இனியாரை மாமியென்று இன்பமாய் சொல்லிடுவோம்
கனிவான கதைபேசி கருத்தோ டுதவிடுவாய்
நனிவான வழிமுறைகள் நாம்வாழ நீவகுத்தாய்
குனியாது நாம்வாழும் குறிக்கோளே நீகொண்டாய்
தனியாக எமைவிட்டு துணிவோடு சென்றாயோ
பனியாக உருகியேநாம் பாசத்தைத் தேடுகிறோம்
இனிவான மாமியைநாம் இனியெங்கு காண்போமோ

******

ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டு
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப் பொழிந்தாரே.

திருச்சிற்றம்பலம்

(திருமூலர் திருமந்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரபு வழி மாண்பு

வேலுப்பிள்ளை தம்பு வேலுப்பிள்ளை + இராமலிங்கம் பொன்னம்மா
→ சட்டநாதபிள்ளை (தலை மகன்)

பிள்ளையினார் சின்னக்குட்டி அப்புத்துரை + தம்பு அன்னப்பிள்ளை
→ சிவயோகம் (2ம் மகள்)

சட்டநாதபிள்ளை + சிவயோகம்
→ **சித்திராதேவி**
பேராம்பிகை
செல்வக்குணவதி
சிறீமுருகன்
ஸ்ரீசண்முகவேல்
தவநாயகி
தவரஞ்சினி
சிறிசெந்திவேல்
தவனேஸ்வரி

சுப்பர் கதிரேசு குழந்தைவேல் + தம்பு ஆச்சிப்பிள்ளை
→ இரத்தினசிங்கம் (தலை மகன்)

வேலுப்பிள்ளை தம்பு பொன்னையா + கணபதியார் பொன்னம்மா
→ புஸ்பராசமணியம்மா (2ம் மகள்)


இரத்தினசிங்கம் + புஸ்பராசமணியம்மா
→ **புரந்திரதேவன்**
புரோகிததேவன்
பாலதேவன்
வாமதேவன்
கலைமதி

சித்திராதேவி + புரந்திரதேவன்
→
- இந்துமதி + ஹேமகுமார் → ஹம்சா, வினோசா
- அருள்மதி + விக்கினேஸ்வரன் → அருள்ராஜ், கேசவராஜ், பவித்தா, காயத்தி
- இளங்குமரன் + கேதீஸ்வரி
- இளந்திரையன் + கோமதனி → விமலரூபன்
- இளஞ்சென்னி + அனுசா → ஷாரங்கி, சிறீராம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்



எங்கள் குடும்பத்தின் அணையா விளக்காய்
ஒளி வீசி விளங்கி அணைந்த
எங்கள் அன்புத்தெய்வம்
சித்திராதேவி புரந்திரதேவன் அவர்கள்
சிவபதம் அடைந்த
செய்தி கேட்டு எமது இல்லம் தேடி வந்து அனுதாபம்
தெரிவித்தோர்களுக்கும், அன்னாரின் இறுதிக்கிரிகைகளில் கலந்து
கொண்டோர்களுக்கும், கடிதம், தந்தி, தொலைபேசி வழியாக
உறவினர்களுடன் துக்கத்தைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும்,
வெளியூர்களிலும் வெளிநாடுகளிலும் நடைபெற்ற துககக்
கொண்டாட்டங்களில் கலந்து தமது
அனுதாபங்களை வெளிப்படுத்தியோருக்கும்
கண்ணீர் அஞ்சலியைக் கணிக்கையாக செலுத்திய கலைநகர் தேசிய
சேவைகள் மன்றம், மற்றும் கலைநகர் விளையாட்டுக்கழக
உறுப்பினர்களுக்கும், அன்னாரின் அந்தியேட்டி மற்றும்
வீட்டுக்கிருத்தியங்களில் கலந்து சிறப்பித்த அன்பு உள்ளங்களுக்கும்
"காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப்பெரிது"
என்ற பொய்யா மொழியை மெய்யாக்கும் வண்ணம் காலமறிந்து பல
வழிகளில் உதவிசெய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது உளங்கனிந்த
நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி

கணவர்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
உறவினர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்,
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்.



Sivaranjanam

சாய்ராம் பிறிண்டேர்ஸ்,சங்கானை T.P No :- 0602211155

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org